# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 40/மா/2019**
**நாள்: 11.03.2023**

திரு. மீனாட்சி சுந்தரம்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, பழைய வண்ணாரப்பேட்டை, பிளாட் எண்.6, புதிய எண்.4, பழைய எண்.29–ல் வசிக்கும் திரு. மீனாட்சி சுந்தரம் என்பவரின் 3.2.2023 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 6.2.2023–ல் பெறப்பட்டு 40/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

சென்னை, வண்ணாரப்பேட்டை, பிளாட் எண்.6, புதிய எண்.4, பழைய எண்.29–ல் வசிக்கும் திரு. மீனாட்சி சுந்தரம் என்பவர் தனது 3.2.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

மறைந்த என்னுடைய மூத்த சகோதரி புதிய எண்.57, ராமானுஜ கூடம் தெரு, சென்னை–21ல் உள்ள அவர்களுடைய சொந்த வீட்டை திரு. (லேட்) தேவராஜனின் வாரிசுகளாகிய மனைவி G. தேன்மொழி, மகள்கள் லஷ்மி மற்றும் மோகனபிரியா ஆகிய மூவர் வீட்டை அபகரித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ல் எந்த சொத்து பத்திரமும் அளிக்காமல் முறைகேடாகவும் சட்டப்புறம்பாகவும் B. ருக்மணி அம்மாளின் வீட்டை இடித்து கட்டுவதற்கு அனுமதி பெற்றுவிட்டார்கள். கட்டிட அனுமதி PPA/WDC No.4/08773/2018 மற்றும் BA/WDCWD C.No.146/2019, dt.07/01/2019. மேற்படி (லேட்) தேவராஜனின் மூன்று வாரிசுகளுக்கும் அந்த வீட்டிற்கு எந்த வாரிசு சொந்தமும் இல்லை. இதிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலர்கள் எந்த சொத்து பத்திரமும் இல்லாமல் (லேட்) தேவராஜனின் வாரிசுகளுக்கு முறைகேடாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டிட அனுமதி அளித்த அதிகாரிகள் மீது தக்க குற்ற நடவடிக்கை எடுக்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.2.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 17.2.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மனுதாரரும், எதிர்மனுதாரராகிய பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி செயற் பொறியாளர் ஆகியோர் 27.2.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜரானார்கள்.

4) மனுதாரரின் 3.2.2023 நாளிட்ட மனுவில் குறிப்பிட்ட பொருள் தொடர்பாக இம்முறைமன்றத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு 21.2.2022 நாளிட்ட ஆணை எண்.191/மா/2022 பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு-11–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

11. <u>Res judicata</u> – No court shall try any suit or issue in which the matter directly and substantially in issue has been directly and substantially in issue in a former suit between the same parties, or between parties under whom they or any of them claim, litigating under the same title, in a court competent to try such subsequent suit or the suit in which such issue has been subsequently raised and has been heard and finally decided by such court.

மேலும், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 8 (1) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) The Ombudsman shall, for the purpose of any enquiry, have all the powers of a civil court trying a suit under the code of civil procedure, 1908 and in particular, in respect of following matters, namely:-

(a) Summoning and enforcing the attendance of complainant or witnesses and examing him / her on oath;

xxx xxx xxx

மேலும் <u>பிரிவு 10 (4)</u> After an enquiry, if the Ombudsman is satisfied that,

(a) x x x
(b) there is no sufficient ground to continue proceedings: or
(c) Other remedies are available to the complainant and it would be more beneficial for the complainant to avail such remedies in view of the circumstances of the case.

he/she may reject the complaint after recording his/her findings stating the reason therefor, and communicate the same to the complaint.

6) எனவே, சென்னை பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த மனுதாரர் திரு. ஜி. மீனாட்சி சுந்தரம் ஏற்கனவே 18.11.2019 நாளிட்ட புகார் மனு அளித்து அதன்மீது இம்முறைமன்றத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், மேலே குறிப்பிட்ட சட்ட விதிகளின்படியும், தற்போது, மனுதாரர் திரு. ஜி. மீனாட்சி சுந்தரம் 3.2.2023 நாளிட்டு அளித்துள்ள மனு மீது மேல் நடவடிக்கை தொடரும் நிலை எழவில்லை என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. G. மீனாட்சிசுந்தரம்,
பிளாட் எண்.6, புதிய எண்.4, பழைய எண்.29,
ராமானுஜ கூடம் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்
மு.ம.எண்.191/மா/2019 நாள்:18.2.2022.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.